Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50


# உதயன்

சுடர் : 39
கதிர் : 172

வியாழக்கிழமை
16 மே 2024

வைகாசி 03 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

**முச்சந்தி முரளி**



"ஜூலி சங்கின்ர குடுமி சும்மா ஆடாது கண்டியளோ, உவா அடிக்கடி இஞ்ச வாறா. ஏதோ பெருசா சம்பவம் நடக்கப்போகுது போல"

# மே 18 ஆம் திகதியன்று தமிழர் தாயகமெங்கும் தேசிய துக்கதினம்!

## ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு அழைப்பு

**யாழ்ப்பாணம், மே 16**

**தமிழ் மக்கள் மிகக் கொடூரமாகக் கொன்று அழிக்கப்பட்டு 15 ஆண்டுகள் நிறைவறுகின்ற வலிசுமந்த நாட்களை நினைவுகூருகின்ற இந்தத் தருணத்தில் தமிழராகிய எம் ஒட்டுமொத்த ஆன்மாவையும் பாதித்த மே 18 ஆம் திகதியன்று தமிழர் தாயகமெங்கும் தமிழ்த் தேசிய துக்கநாளாக நாம் அனைவரும் கடைப்பிடிப்போம் - என்று அழைப்பு விடுத்துள்ளது ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு.**

11



## குமுதினிப் படுகொலை நினைவேந்தல் நேற்று

யாழ்ப்பாணம், மே 16

குமுதினிப் படுகொலையின் 39 ஆவது ஆண்டு நினைவேந்தல் நெடுந்தீவில் நேற்று முன்னெடுக்கப்பட்டது. 1985 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி

11

## பொறியியலாளர் இன்றி அல்லாடும் மின்சாரசபை

கொழும்பு, மே 16

இலங்கை மின்சாரசபையில் சுமார் 130 பொறியியலாளர்கள் அண்மையில் சேவையில் இருந்து விலகியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. 'கோப்' குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே முன்

11

ஆட்களைக் கடத்தும்

## முகவர்களுக்கு கடுந்தண்டனை

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மே 16

ஆட்கடத்தலில் ஈடுபடும் முகவர்களுக்கு எதிராக தராதரம் பாராமல் சட்டத்தின்மூலம் அதிகபட்ச தண்டனை வழங்கப்படும் எனப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

11

## இன அழிப்பின் குறியீடே முள்ளிவாய்க்கால் கஞ்சி

யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆ.குழு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 16

வடக்கு - கிழக்குத் தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை அரசினால் 3 தசாப்தங்களுக்கு மேல் மேற்

11



## யாழில் ஜூலி சங்!

யாழ்ப்பாணம், மே 16

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் நேற்று யாழ்ப்பாணத்துக்குத்

11

## 'யூடியூப் சனல்' மீது பாய்ந்தது நீகழ்நிலை காப்புச் சட்டம்

கொழும்பு, மே 16

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகேவுக்கு எதிராக 'யூடியூப் சனல்' ஒன்று அவதூறான தகவல்களை வெளியிடுவதையும் தொடர்புகொள்வதையும் தடுக்கும்வகையில்

11



யசோதை சரவணபவன் தலைமையில்

## முள்ளிவாய்க்கால் கஞ்சியோடு மானிப்பாயில் நினைவேந்தல்!

யாழ்ப்பாணம், மே 16

மானிப்பாய் பொதுச் சந்தையில் நேற்று முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவனின் ஏற்பாட்டில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதி கிளையினரால் முள்ளிவாய்க்கால்

11




மக்கள் ம[illegible] தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழம் தோன்றியிருந்தால் இஸ்ரேலாக உருவெடுத்திருக்கும்

## கூறுகின்றார் விமல்




கொழும்பு, மே 16

**விடுதலைப்புலிகளுடனான போர் முடிவுக்கு வராமலிருந்திருந்தால் தென்னாசியாவில் தமிழீழம் தோற்றம் பெற்று அது இஸ்ரேல் போல் மாற்றமடைந்திருக்கும், காஸாவின் இன்றைய நிலையே எமக்கு ஏற்பட்டிருக்கும் - இவ்வாறு நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பலஸ்தீன விவகாரம் தொடர்பான சபை ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், இஸ்ரேலின் மனிதாபிமானமற்ற தாக்குதலினால் பலஸ்தீனர்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். பலஸ்தீனர்களின் இன்றைய நிலை குறித்து நாங்கள் கவலையடைகிறோம்.

இலங்கைக்குள் ஒரு தனித்த நாட்டை உருவாக்கிக் கொடுப்பதாக பெரிய பிரித்தானியா போலியான சுதந்திரத்தை வழங்கி இலங்கையில் வாழ்ந்த தமிழ்த் தலைவர்களிடம் குறிப்பிட்டது. இதன் பின்னரே 50:50 அதிகாரம் பற்றி பேசப்பட்டது. 50:50 அதிகாரம் என்பது தோல்வியடைந்த நிலையில் போர் மூண்டது. போரை முடிவுக்குக் கொண்டு வராமல் இருந்திருந்தால் தென்னாசியாவில் தமிழீழம் தோற்றம் பெற்றிருக்கும். அதனடிப்படையில் தென்னாசியாவில் காஸாவைப் போன்ற நிலைமை எமக்கு ஏற்பட்டிருக்கும். பலஸ்தீனர்களின் இன்றைய நிலையை நாங்கள் எதிர்கொண்டிருப்போம்.

இஸ்ரேலுக்கு ஆயுதங்களை வழங்கிவிட்டு யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருமாறு அமெரிக்கா முதலைக் கண்ணீர் வடிக்கிறது. இலங்கைக்கு எதிராகச் செயற்படுத்தும் போலியான மனித உரிமைகளை பாதிக்கப்பட்டுள்ள பலஸ்தீனர்களுக்காக உண்மையுடன் உலக நாடுகள் செயற்பட வேண்டும் - என்றார். (ச-இ)

# நினைவுகூரும் உரிமை இலங்கையருக்கு உண்டு

## தேசிய மக்கள் சக்தி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 16

போரில் உயிரிழந்தவர்களை நினைவுகூருவதற்கு இலங்கையர்களுக்கு உரிமை உண்டு. அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

-இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

இலங்கையில் உள்நாட்டுப் போர் நிறைவடைந்து 15 வருடங்கள் பூர்த்தியடைகின்ற நிலையில், அதனை அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இருப்பினும் போரில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் நடவடிக்கையில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக ஆங்காங்கே சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

போரில் இறந்தவர்களை நினைவுகூரும் உரிமையானது சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட உரிமை. எனவே இலங்கையிலும் அந்த உரிமை உறுதிப்படுத்தப்படவேண்டும் - என்றார். (ச-44)

# விஜயதாஸவை நீக்குங்கள்



கொழும்பு, மே 16

நீதிஅமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவை அமைச்சரவையில் இருந்து வெளியேற்றுமாறு அமைச்சர்கள் சிலரும், மொட்டுக் கட்சி உறுப்பினர்களும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர் என தெரியவருகின்றது. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக களமிறங்குவதற்கும், எதிரணி அரசியலுக்கு தலைமைத்துவம் வழங்கும் வகையிலும் செயற்படுவதாலேயே விஜயதாஸ தொடர்பில் மேற்கண்டவாறு தீர்மானம் எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது. எனினும், இதற்கு ஜனாதிபதியிடமிருந்து உடனடிப் பதில் வழங்கப்படவில்லை.

'தன்னை அமைச்சரவையில் இருந்து நீக்கவேண்டும் என்ற நோக்கிலேயே ரொஷான் ரணசிங்க செயற்பட்டார், அதன்மூலம் அரசியல் இலாபம் பெற முற்பட்டார். அதேபோல விஜயதாஸவையும் நீக்கினால் அவரும் பரப்புரை தேடலாம். நேரம் வரும்போது உரிய முடிவை எடுக்கலாம்.' - என ஜனாதிபதி கூறியுள்ளார் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. (ஒ-44)

# சுயாதீன அணிகள் கொழும்பில் சங்கமம்

கொழும்பு, மே 16

நாடாளுமன்றத்தில் சுயாதீன அணிகளாகச் செயற்படும் மேலும் சில தரப்புகள் இணைந்து புதியதொரு அரசியல் கூட்டணியை உருவாக்குவதற்கான பேச்சுகளை கொழும்பில் நேற்றுமுன்தினம் முன்னெடுத்தன.

சுதந்திரக் கட்சியின் நிமால் சிறிபாலடி சில்வா தரப்பு, அநுர பிரியதர்சன யாப்பா அணி, சுனில் பிரேமஜயந்த அணி என்பனவே சந்திப்பில் பங்கேற்றன.

'முற்போக்கான அரசியல் கூட்டணி உதயமாகும். அம்பாந்தோட்டையில் அடுத்த மாதம் கூட்டணி மலரும். இதற்கான கூட்டம் ஏற்பாடு செய்யப்படும்.' - என்று நாடாளுமன்ற உறுப்பினர் அநுரபிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

இச்சந்திப்பில் பங்கேற்ற தரப்புகள் தற்போதைய சூழ்நிலையில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சார்பாகவே செயற்பட்டு வருகின்றன. (ஒ-44)

# வெசாக் அலங்கரிப்பில் பிளாஸ்ரிக் தடை

கொழும்பு, மே 16

வெசாக் தினத்தில் மேற்கொள்ளப்படவுள்ள பல்வேறு அலங்காரங்களில் பிளாஸ்ரிக் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது என்று மத்திய சுற்றாடல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த 2017 ஆம் ஆண்டு அரசாங்கம் வெளியிட்ட வர்த்தமானியின் பிரகாரம் பொலித்தீன் பொருள்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-இ)

# தொழுநோயாளர்கள் 264 பேர் அடையாளம்

கொழும்பு, மே 16

இந்த ஆண்டில் 264 புதிய தொழுநோயாளிகள் கண்டறியப்பட்டுள்ளனர் என்று தொழுநோய் ஒழிப்பு மையம் தெரிவித்துள்ளது.

அவர்களில் 24 பேர் 15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் என்று அதன் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் வைத்தியர் நிருபா பல்லேவத்த குறிப்பிட்டுள்ளார்.

2023 ஆம் ஆண்டில், ஆயிரத்து 580 தொழுநோயாளிகள் பதிவாகியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# தமிழர்களின் அடையாளத்தை மூடிமறைக்க அரசு எத்தனம்!

## ம. உ. ஆ. முன்னாள் ஆணையாளர் அம்பிகா சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 16

இலங்கையின் உள்நாட்டுப் போரின் இறுதிக் காலப்பகுதிகளில் இடம்பெற்ற கொடூரங்கள் மற்றும் மறைக்கப்படும் தமிழரின் வரலாறு உள்ளிட்டவற்றை அடுத்த தலைமுறைக்குக் கடத்தும் வகையிலான செயற்பாடுகளை அராஜகக்கரம் கொண்டு ஒடுக்குவதற்கு அரசாங்கம் முற்படுகின்றது.

-இவ்வாறு இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒவ்வொரு வருடமும் கடைப்பிடிக்கப்படும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்களைத் தடுப்பதையே அரசாங்கம் நோக்கமாகக் கொண்டு செயற்படுகிறது.

இந்த வருடம் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்குவதைத் தடுத்து நிறுத்தும் நோக்குடன் நீதிமன்றத் தடை உத்தரவையும் பொலிஸார் பெற்றுள்ளனர்.

உயிரிழந்தோரை நினைவுகூருவதை நிறுத்துவதே அரசாங்கத்தின் நோக்கம் என்பதை முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்படுவதைத் தடை செய்யும் அரசாங்கத்தின் தொடர்ச்சியான நடவடிக்கைகளும் அதற்காகத் தெரிவிக்கப்படும் காரணங்களும் தெளிவாக வெளிப்படுத்துகின்றன - என்றார். (ச-இ)

# தேர்தல் தொடர்பான நிலைப்பாடு: ரணில் அடுத்தமாதம் அறிவிப்பு

கொழும்பு, மே 16

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான தனது நிலைப்பாட்டை எதிர்வரும் ஜூன் முதல் வாரத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரபூர்வமாக அறிவிக்கவுள்ளார் என அறியமுடிகின்றது.

நாடாளுமன்றத்தில் விசேட உரையொன்றை நிகழ்த்துகையில் ரணில் இந்த அறிவிப்பை வெளியிடவுள்ளார் எனவும் தெரியவருகின்றது. (ஒ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்றுக்கு வழங்கிய உறுதிமொழி: நிறைவேற்றாத கரைச்சிப் பிரதேசசபை

கிளிநொச்சி, மே 16

**கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றுக்கு 2020 ஆம் ஆண்டு கரைச்சிப் பிரதேசசபையால் சட்டவிரோத கடைகளை அகற்றுவது தொடர்பில் எழுத்து மூலம் வழங்கப்பட்ட உறுதிமொழி இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை என்பது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் தெரியவந்துள்ளது.**

கரைச்சிப் பிரதேசசபைக்குச் சொந்தமான காமிப்போக்குச் சந்தியிலுள்ள காணியில் அப்போதிருந்த மக்கள் பிரதிநிதிகளை கொண்டமைந்த சபையால் அனுமதி வழங்கப்பட்ட சட்ட விரோத கடைக் கட்டடங்கள் தொடர்பில் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில், செயலரால் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இருப்பினும் வழக்கானது தவறான சட்டப்பிரிவின் கீழ்தாக்கல் செய்யப்பட்டுள்ளமையாலும், சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் மன்றுக்குப் பாரப்படுத்தாமல் சபையால் அனுமதியற்ற கட்டடங்களை அகற்றமுடியும். எனவே வழக்கை மீளப்பெறுகின்றோம் எனத் தெரிவித்து 2020ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி கடிதம் மூலம் தெரிவித்து வழக்கை சபை மீளப்பெற்றிருந்தது.

இருப்பினும் சட்டவிரோத கட்டடங்கள் இன்றுவரை அகற்றப்படாது காணாட்டப்பட்டமை தொடர்பில்கரைச்சிப்பிரதேசசபையிடம் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் மூலம் கோரப்பட்டது.

"சட்டவிரோத கடைக் கட்டடங்கள் இதுவரை அகற்றப்படவில்லை. அகற்றுமாறு உரிய தரப்பினர்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அகற்றப்படும்" என அதற்குப்பதிலளிக்கப்பட்டுள்ளது. (ஓ-214)



## பிரபாவின் வீட்டுக்கு முன் முள்ளிவாய்க்கால் ஊர்தி

யாழ்ப்பாணம், மே 16

தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனின் வீட்டுக்கு முன்பாக, முள்ளிவாய்க்கால் நினைவேந்தலும், ஊர்திப் பவனியும், கஞ்சி வழங்கலும் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தருமாகிய ஈ.சரவணபவனின் ஏற்பாட்டில், காரைநகர் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் கணேசபிள்ளை பாலசந்திரன் தலைமையில் கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதிக் கிளையினால் இந்த நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. (ம-125)

## 24 மணிநேரத்தில் 7 துஷ்பிரயோகம்

கொழும்பு, மே 16

கடந்த 24 மணித்தியாலங்களில் 16 வயதுக்குட்பட்ட 7 பாடசாலை மாணவிகள் பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. மனம்பிட்டிய, மாங்குளம், இரத்தினபுரி, வெல்லம்பிட்டிய, வெலவாலி மற்றும் கண்டி ஆகிய பகுதிகளில் இந்தச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நேற்று

கிளிநொச்சி, மே 16

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

கடற்றொழில் அமைச்சரும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், அங்கஜன் இராமநாதன் ஆகியோரின் பங்குபற்றலுடன் நடைபெற்றது. (ஓ-113)

தென்மராட்சியில்

## அரச காணிகளுக்கு உறுதிப்பத்திரங்கள்

சாவகச்சேரி, மே 16

தென்மராட்சிப் பிரதேசத்தில் அரச காணிகளில் நீண்டகாலமாகக் குடியிருக்கும் குடும்பங்களுக்கு காணி உறுதிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதற்கான விவரங்கள் பெறும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக குடியிருப்பாளர்களின் பதிவுகள் இடம்பெற்று வருகின்றன.

முதற்கட்டமாக எழுதுமட்டுவாழ் வடக்கு, மிருசுவில் வடக்கு, பெரியானோடை, கெற்பேலி, கரம்பகம் போன்ற பிரிவுகளிலுள்ள அரச காணிகளின் குடியிருப்பாளர்களின் விவரங்கள் திரட்டப்படுகின்றன. குடியிருப்பாளர்கள் காணிகளில் வசிப்பதை உறுதிப்படுத்தும் அனுமதிப்பத்திரம் மற்றும் கொடுப்பனவுப் பத்திரம் இருப்பின் அவற்றுடன் தமது தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றையும் சேர்த்து பிரதேச செயலக காணி அலகில் கையளிக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

## தபால் பொதிகள் மூலம் போதைப் பொருள்கள்!

பல்வேறு நாடுகளிலிருந்து விமான தபால் சேவை மூலம் கொழும்பு மத்திய தபால் பரிமாற்ற நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்ட 9 மில்லியன் ரூபா பெறுமதியான போதைப் பொருள்கள் அடங்கிய 10 பொதிகள் சுங்க போதைப் பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினரால் நேற்றுக் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தப் பொதிகளானது கனடா, இங்கிலாந்து மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து தெஹிவளை, வெள்ளவத்தை மற்றும் வேயங்கொட ஆகிய பிரதேசங்களுக்கு விமான தபால் சேவை மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது. (ச-இ)

## தினம் தெரியுமோ?

'ஆஸ்பத்திரிக்குப் போறதெண்டால் ஆளில்லாமல் போகாதே' என்டொரு புதுமொழி இப்ப இருக்குது. வருத்தம் வந்து வார்ட்டில இருந்தால் அவையைச் சரியாப் பராமரிக்கிறதைப் பொறுத்துத்தான், அந்த வருத்தம் மாறும். டொக்டர்மார் சொல்றபடி நேரத்துக்குச் சாப்பாடு, மருந்து, தண்ணி, பழவகை எண்டெல்லாம் குடுக்கிறதில இருந்து அவைக்கு மலசலம் கிளீன் பண்றது வரைக்கும் பணிவிடை செய்யவேணும். முந்தியெண்டால் எல்லாருக்கும் சொந்த பந்தமெண்டு எல்லாரும் இஞ்சையே இருக்கிறதால மாறிமாறி ஒவ்வொருத்தர் வருத்தக்காரரைப் பராமரிப்பினம். ஆனால் இப்ப அப்பிடியில்லையே. வீட்ட இருக்கிற ஆக்களை விடவும் வெளிநாட்டில நிக்கிறவை தானே கூட. வீட்ட நிக்கிறவையும் ஏதாவது ஒரு வேலைக்குப் போய்வருவினம். ஒருநாள், ரண்டுநாள் எண்டால் லீவைப் போட்டு பராமரிக்கலாம். ஆனால் கிழமைக்கணக்கில ஒராளை ஆஸ்பத்திரியில வைச்சுப் பராமரிக்கிறதெண்டால், ஆரையும் காசுக்குப் பிடிச்சால்தான் சரிவரும்.

ஒவ்வொரு ஆஸ்பத்திரியிலையும் இப்பிடி வருத்தக்காரரைப் பராமரிக்கிறதுக்கெண்டு ஆக்கள் இருக்கினம். அவையெல்லாரும் ஒரு கொம்பனியில தங்கட பேரைப் பதிவு செய்திருப்பினம், அந்தக் கொம்பனியின்ர ஒப்பீஸ், எல்லா ஆஸ்பத்திரியிலையும் இருக்கும். அங்கபோய், சொன்னால் அவை ஒராளை அனுப்புவினம். பராமரிக்கிறவைக்கு ஒவ்வொரு நாளும் ரண்டாயிரம் ரூபா குடுக்கோணும். அதில 400 ரூபா கொம்பனிக்கு, 1600 ரூபா பராமரிக்கிற ஆளுக்கு. இப்பிடி வருத்தக்காரரை பராமரிக்கிறவையில கனபேர் தாங்கள் வாங்கிற சம்பளத்துக்குத் துரோகம் செய்யாமல், வடிவாத்தான் பாக்கினம். ஆனால், ஒருசிலபேர் காசு உழைச்சால் காணும் எண்டுதான் நடக்கினம். அவையின்ர கொம்பனியில ஒராளைப் பாக்கத்தான் பதிவு இருந்தாலும், வார்ட்டில நிக்கிற வேற வருத்தக்காரரோட போய்க் கதைச்சு அவையையும் பராமரிப்பினம். சிலவேளையளில ஒரே ஆளே நாலைஞ்சு பேரைப் பராமரிக்கிறதும் உண்டு. ஒரே நேரத்தில கன பேரைப் பராமரிக்கிறதெண்டது அவையின்ர கெட்டித்தனம். ஆனால் இஞ்ச கெட்டித்தனத்தை விட, ஒரேயடியா நிறையக் காசு உழைக்கிறதுதான் அவையின்ர நோக்கம். அதால எல்லாரையும் சரியாப் பராமரிக்கேலாமல், வருத்தக்காரரையும் கஷ்டப்படுத்துகினம் எண்டு கனக்க முறைப்பாடு. இப்பிடி ஒரு வருத்தக்காரருக்கு அவரைப் பராமரிக்கிறவர் ஒழுங்கா தண்ணி குடுக்காததால அவர் செத்தவர் எண்டும் ஒரு கதை அடிபடுகுது.

வருத்தக்காரரைப் பராமரிக்கிறம் எண்டு சொல்லிக் காசை வாங்கிப் போட்டு, அவையள் வார்ட்டில நிக்கிறதைவிட கன்ரீனில நிண்டு பம்பலடிக்கிறதுதான் கூடவாம். இரவிலையும் வார்ட்டில நிக்காமல் வேற எங்கையோ போய் நல்லா நித்திரை கொண்டிட்டு விடியத்தான் வருவினம். நோயாளிக்கு தேவைப்படேக்க கிட்டவும் காணக்கிடைக்காது இந்தப் பராமரிக்கிற ஆக்கள், விசிட்டர்ஸ் நேரத்தில மட்டும் பம்பரம் மாதிரி சுழண்டடிச்சு 'நாங்கள் விழுந்து விழுந்து கவனிக்கிறம்' எண்டு சொந்தக்காரருக்கு காட்டிக் கொள்ளுவினம். அவைபோன பிறகு பழைய குருடி, கதவைத் திறவடிதான். இப்பிடி வருத்தக்காரரைப் பராமரிக்க நிக்கிறவைக்கு நேர்ஸ்மாரும் சப்போர்ட். ஏனெண்டால் நேர்ஸ்மாருக்கு சாப்பாடு வாங்கியந்து குடுக்கிறது, அவைக்கு தொட்டாட்டு வேலையள் செய்யிறதெல்லாம் இந்தப் பராமரிக்கிற ஆக்கள் தான். அதால அவையும் கண்டு கொள்றேலை. பராமரிக்கிறதுக்கு ஆக்களை அனுப்பிற கொம்பனியும் அதை மேற்பார்வைசெய்யிறேலை. கடைசியில அந்தரப்படுறதென்னவோ, அப்பாவி வருத்தக்காரர்தான்.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜஸ்தானை வீழ்த்தியது பஞ்சாப்

ஐ.பி.எல். தொடரில் நேற்று நடந்த ராஜஸ்தான் அணிக்கு எதிரான ஆட்டத்தில் பஞ்சாப் அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

ஐ.பி.எல். தொடரின் 65 ஆவது லீக் ஆட்டம் அசாம் கிரிக்கெட் சங்க மைதானத்தில் நேற்று நடைபெற்றது. அதில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியும், பஞ்சாப் கிங்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் அணி, ஆரம்பம் முதல் தடுமாறியது. ரியான் பராக் மற்றும் அஸ்வின் ஆகியோரே நிலைத்து நின்று ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர். 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் ராஜஸ்தான் அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 144 ஓட்டங்களைப் பெற்றது.

145 என்ற இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் அணி ஆரம்பத்தில் தடுமாறியது. சாம் கரன் மற்றும் ஜிதேஷ் சர்மா ஆகியோர் நிதானமாக ஓட்டங்களைச் சேர்த்து அணியை சரிவில் இருந்து மீட்டனர். சாம் கரன் 38 பந்துகளில் அரைச் சதத்தைப் பூர்த்தி செய்தார்.

18.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் பஞ்சாப் அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 145 ஓட்டங்களைப் பெற்று, 5 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. (எ-இ)



## காணவில்லை

### வைத்திலிங்கம் கனகலிங்கம்




என்ற 82 வயது, ஞாபக மறதியால் பாதிக்கப்பட்ட வயோதிபர் யாழ். நகரில் கடந்த மூன்று நாட்களாக அலைந்து திரிகிறார். இவரைக் கண்டவர்கள் தயவு செய்து கீழ்வரும் இலக்கத்துடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

**077 1387 596,**
**071 9999 306,**
**074 0909 597**

10/2, முதலாம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(யாழ்/வேம்படிச் சந்திக்கு அருகிலுள்ள
Bcas கம்பஸ்க்கு பக்கத்து லேன்)

# மரண அறிவித்தல்



## நடராஜன் செட்டியார் பொன்ராஜன்

(பொன்னா இரும்பகம், யாழ்ப்பாணம்)

தாயின் மடியில்
05.01.1976

இறைவன் அடியில்
14.05.2024

வண்ணார்பண்ணை சிவன்கோயில் வடக்கு வீதியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட நடராஜன் செட்டியார் பொன்ராஜன் அவர்கள் நேற்று முன்தினம் (14.05.2024) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜன் செட்டியார் - மாரியம்மாள் தம்பதியரின் பாசமிகு இளைய மகனும், பானுமதி (இந்தியா), தனலக்ஷ்மி (இந்தியா), கதிரேசன் (பொன்னா இரும்பகம், யாழ்ப்பாணம்), பொம்மியம்மாள் (இந்தியா), கிருஷ்ணவேணி (யாழ்ப்பாணம்), பொன்குமார் (பொன்னா இரும்பகம், யாழ்ப்பாணம்), பொன்ராணி (உள்ளக கணக்காய்வாளர், பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு, கொழும்பு) ஆகியோரின் பாசமிகு அன்புச் சகோதரனும், அமரர் தனபாலன் (இந்தியா), வீரபுத்திரன் (இந்தியா), சாவித்திரி (யாழ்ப்பாணம்), குணசேகரன் (இந்தியா), அமரர் அருட்செல்வன் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், நதிஸ்வரன் (யாழ்.வைத்தீஸ்வரா கல்லூரி), அபிஷாயினி (யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி), சாய்ஷ்வரன் (யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையும், கார்த்தீபன் (Guhan Computer Shop, இந்தியா), காருண்யா (B.Sc - IT, இந்தியா), நாகராஜ் (இந்தியா), வெங்கடேஷ் (BE - Aeronautical Engineering), கௌதமி (வைத்தியர், இந்தியா), காவ்வியஸ்ரீ (இந்தியா), நந்தன்ஸ்ரீ (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தாய்மாமனும், லித்திகாவின் (இந்தியா) பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2024) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல - 102,
சிவன்கோயில்
வடக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 614 3271, 077 582 6793
077 191 2166, 077 698 7587

(CS 05504) S-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நினைவேந்தல் என்னும் பேராயுதம்

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் இறுதி நாள்களில் இருக்கின்றோம். முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நெருங்க நெருங்க சிறிலங்கா அரசாங்கத்தின் கெடுபிடிகளும் -அடக்குமுறைகளும் உச்சம்தொடுவது வழமை. இப்போதும் அது தனது கோரப்பற்களை விரித்துக்கொண்டு தமிழர்கள் மீது பாய்ந்து கடித்துக் குதறிக்கொண்டுதான் இருக்கின்றது.

முள்ளிவாய்க்கால் கஞ்சி என்பது நினைவேந்தலின் பிரதான அடையாளம். முள்ளிவாய்க்கால் கஞ்சியைப் பரிமாறுவது இறுதிப்போரின் வலியை ஊடுகடத்துவதாகும். நீதிக்கான தேடலில் நினைவேந்தல் மிக முக்கியமான ஆயுதம். ஈழத் தமிழர்களிடம் அந்த ஆயுதம் மட்டுமே இப்போது எஞ்சியுள்ளது.

இதனால்தான் சிங்கள தேசம் கடும் சினம் கொள்கின்றது. அதன் வெளிப்பாடுதான் திருகோணமலையிலும் அம்பாறையிலும் எதிரொலித்திருக்கின்றது. திருகோணமலையில் நீதிமன்றத்தின் தடையை சிறிலங்கா பொலிஸார் பெற்றிருக்கின்றனர். அதுவும் முள்ளிவாய்க்கால் கஞ்சியை விநியோகிப்பதால் தொற்றுநோய் அபாயம் இருப்பதாக அறிக்கையிட்டு தடையைப் பெற்றிருக்கின்றனர். இது மிகவும் கேவலமான செயல் என்பதையும், நீதிமன்றங்கள் பொலிஸார் எதைச் சொன்னாலும் அதைக்கேட்டு தடை வழங்கும் அளவுக்கு சுயாதீனத்தை இழந்து விட்டனவா என நாடாளுமன்றத்தில் வைத்துக் கேள்வி எழுப்பியிருந்தார் செ.கஜேந்திரன். இந்த விடயத்தில் தொற்றுநோய் தொடர்பில் அறிக்கையிடக் கூடியவர்கள் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களே. பொலிஸார் எப்படி அதைச் சொல்லி தடையைப் பெறமுடியும் என முன்னாள் நீதியரசரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விக்னேஸ்வரனும் கேள்வி எழுப்பியிருக்கின்றார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு ஏதாவதொரு விதத்தில் தடையைப்பெறுவதற்கு சிறிலங்கா பொலிஸார் முயற்சிக்கின்றனர். இது அவர்களது செயற்பாடு என்பதற்கு அப்பால் பௌத்த - சிங்கள பேரினவாதத்தின் போக்கு அது. பௌத்த - சிங்கள பேரினவாதத்தில் ஊறித்திளைத்த ஆட்சியாளர்களும், அவர்களது அடிவருடிகளும் அதை நடைமுறைப்படுத்த முற்பட்டதன் விளைவே முள்ளிவாய்க்கால் பேரவலம். அந்தப் பேரவலத்தைக் கூட நினைவுகூரக் கூடாது என்பதற்காக தேடித்தேடி தடைபோடுகின்றனர். மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த காலத்தில்- அவரது சகோதரரும் இறுதிப்போரின் இனப்படுகொலையாளியுமான கோத்தாபய ராஜபக்ச பாதுகாப்புச் செயலராக இருந்த காலத்தில் - முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை பாதுகாப்புத் தரப்பினரைக் களமிறக்கித் தடுத்தார்கள். நல்லாட்சிக் காலத்தில் நினைவேந்தலுக்கான கெடுபிடிகள் குறைவாக இருந்தனவே தவிர முற்றாக அகலவில்லை. கோத்தாபய ஜனாதிபதியாகத் தெரிவான காலத்தில் கொரோனா பேரிடரைக் காட்டி முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை தொடர்ச்சியாகத் தடுத்தனர். தற்போது ராஜபக்சக்களின் ஆதரவுடன் இருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அதை தொடரச் செய்கின்றார்.

நினைவேந்தல்கள் ஊடாக முள்ளிவாய்க்கால் கஞ்சி ஊடாக இறுதிப்போரில் நடந்தேறிய கொடூரங்கள் மீளவும் மீளவும் நினைவுபடுத்தப்பட்டுக்கொண்டேயிருக்கும். முள்ளிவாய்க்கால் பெருந்துயரத்தின் வலி அடுத்த தலைமுறைக்கும் ஊடுகடத்தப்பட்டுக் கொண்டிருக்கும். பட்டினியால் முள்ளிவாய்க்காலில் மக்கள் பட்ட வேதனையை எதிர்கால சந்ததியும் உணரும். இந்த ஊடுகடத்தல் நீதிக்கான தேடலை இன்னும் வீரியமாக்கிக்கொண்டே செல்லும். இதனால் சிறிலங்காவின் ஆட்சியாளர்கள் எந்தவழியிலாவது அதைத்தடை செய்வதற்கு முயல்கின்றனர். ஆனாலும் தடைகளைத்தாண்டி நினைவேந்துவது தமிழர்கள் கடமை. இந்தத்தடைகளையெல்லாம் உடைத்தெறிந்து முள்ளிவாய்க்கால் மண்ணில் எங்கள் உறவுகளை நினைவு கூருவோம்.




# அஸ்ட்ராஜெனெகா; அச்சம் வேண்டாம்



கொழும்பு, மே 16

**அஸ்ராஜெனெகா தடுப்பூசியைப் பெற்றுக்கொண்ட இலங்கையர்கள் தேவையற்ற அச்சம்கொள்ளத் தேவையில்லை என தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் தலைவர் விசேட மருத்துவர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்துள்ளார்.**

அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியைச் செலுத்தியதால் குருதி உறைவு உள்ளிட்ட பக்கவிளைவுகள் ஏற்படும் என்று அந்நிறுவனத்தின் மீது உலகம் முழுவதும் பல்வேறு தரப்பினர் வழக்குத் தொடர்ந்திருந்த நிலையில், அதனை உற்பத்தி செய்த நிறுவனம் ஏற்றுக்கொண்டது.

இந்த நிலையில், அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு எதிர்காலத்தில் பாதகமான விளைவு ஏற்படாது என்றும், இலங்கையர்கள் அச்சப்படவேண்டாம் எனவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவுறுத்தியுள்ளது. (ச-இ)

# கொத்தணிப் பாடசாலைகள் நாடுமுழுவதும் விரைவில்!

கொழும்பு, மே 16

கல்வி நிர்வாக சீர்திருத்தத்தின் ஆரம்ப கட்டமாக நாடளாவிய ரீதியில் ஆயிரத்து 220 கொத்தணிப் பாடசாலைகள் உருவாக்கப்படுவதுடன் அவற்றைக் கண்காணிக்க 350 பாடசாலைக் குழுக்கள் உருவாக்கப்படும் என்று கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். அதற்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு அதற்குரிய சுற்றறிக்கை எதிர்வரும் நாள்களில் வெளியிடப்படும். தற்போதுள்ள 100 கல்வி வலயங்களும் படிப்படியாக அதிகரிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



உள்ளூராட்சிமன்ற

## வேட்பு மனுக்களை நீக்க ஆலோசிப்பு

கொழும்பு, மே 16

கடந்த ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்பு மனுக்களை நீக்குவதற்கு அரசாங்கம் ஆலோசிக்கிறது என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அடுத்த வருடம் புதிய வேட்பு மனுக்கள் கோரப்பட்டு, உள்ளூராட்சிமன்றங்களுக்கான தேர்தலை நடத்த அரசாங்கம் உத்தேசித்துள்ளது என்றும் தெரிவித்தார். (ச)

# நினைவுப்பரிசாக தேயிலை

கொழும்பு, மே 16

இலங்கைக்கு வருகைதரும் ஒவ்வொரு சுற்றுலாப் பயணிகளுக்கும் அவர்கள் நாடுதிரும்பும்போது விமான நிலையத்தில் தேயிலையை நினைவுப் பரிசாக வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. இலங்கைத் தேயிலையை உலகளவில் பிரபலப்படுத்தும் நோக்கில் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# பணிப்புறக்கணிப்பால் பல்கலைகள் பாதிப்பு!

கொழும்பு, மே 16

கல்விசாரா ஊழியர்களின் வேலைநிறுத்தம் காரணமாக இலங்கையில் பல்கலைக்கழக அமைப்பு பெரும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளது என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

கல்விசாரா ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக கல்வி நடவடிக்கைகளில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. தற்போது பல்கலைக்கழகக்கல்வி நடவடிக்கைகள் இணைய வழியில் நடத்தப்பட்டு வருகின்றன. அத்துடன் பணிஸ்தம்பிதமடைந்து மாணவர்களை பல்கலைக்கழகத்துக்கு அனுமதிப்பதும் தாமதமடைந்துள்ளது. எனவே கல்விசாரா ஊழியர்கள் அனைவரும் மாணவர்களைப் பற்றிச் சிந்தித்து மீண்டும் பணிக்குத் திரும்பவேண்டும் என்றும் அவர் கோரிக்கை முன்வைத்துள்ளார். (ச-இ)

**நாளை**

17.05.2024

**வெள்ளிக்கிழமை**

வைகாசி - 04

சுபநேரம் : 05.53 - 07.23

ராகுகாலம் : 10.23 - 11.53

**நாளொரு நல்வார்த்தை**

நீ ஒழுக்கம் உள்ளவனாக இருந்தால் கவலையே வராது.
நீ அறிவாளியாக இருந்தால் குழப்பம் வராது
நீ துணிவுள்ளவனாக இருந்தால் அச்சம் வராது.

- கன்பூஷியஸ் -

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# குருப்பெயர்ச்சி பலன்கள் (2024 - 2025)

கடுமையாக உழைத்தால் வாழ்வில் நிச்சயம் முன்னுக்கு வந்துவிடலாம் என்பதில் ஆழமான நம்பிக்கை கொண்டவர்கள் மகர ராசிக்காரர்கள். உத்திராடம் 2ஆம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2ஆம் பாதம் வரையிலான நட்சத்திரங்களைக் கொண்ட மகர ராசிக்காரர்கள் எடுக்கும் வேலையை மின்னல் வேகத்தில் முடிக்கும் தன்மை கொண்டவர்கள். அப்படிப்பட்டவர்களுக்கு இந்த குருப்பெயர்ச்சி எப்படிப்பட்ட மாற்றங்களைக் கொடுக்கும் என்பதைப் பார்ப்போம்.




இதுவரை உங்கள் சுகவீடான 4 இல் அமர்ந்து எந்த சுகங்களையும் அனுபவிக்க முடியாமல் தடுத்ததுடன், பலவகையில் பாடாய்படுத்திய குருபகவான் 1.5.24 முதல் 14.5.25 வரை 5ஆம் வீட்டில் நுழைந்து அள்ளிக் கொடுப்பதுடன், வாழ்க்கைக்கு அஸ்திவாரத்தையும் அமைத்துத் தருவார்.

குடும்பத்தில் எப்போதும் சண்டை சச்சரவும், வாக்குவாதமும் இருந்ததே! ஒரே வீட்டுக்குள் ஒட்டுறவு இல்லாமல் பிரிந்துதானே இருந்தீர்கள். அந்த நிலைமாறும். வீட்டில் மகிழ்ச்சி தங்கும்.

குரு உங்கள் ராசியை பார்ப்பதால் எதையோ இழந்ததைப்போல் இருந்த உங்கள் முகம் மலரும். குரு உங்களின் 9ஆம் வீட்டை பார்ப்பதால் தந்தையாருடன் இருந்து வந்த கருத்துவேறுபாடுகள் நீங்கும். அவர்வழி உறவினர்களால் ஆதாயம் உண்டு. அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள். இழுபறியான வழக்குகளில் சாதகமான நிலை காணப்படும்.

**குருபகவானின் நட்சத்திர சஞ்சாரம்**

1.5.24 முதல் 12.6.24 வரை சூரியனின் நட்சத்திரமான கார்த்திகை நட்சத்திரத்தில் குரு பயணிப்பதால் திடீர் பயணங்களும், செலவுகளும் அதிகரிக்கும். தந்தை வழி உறவினர்கள் வீட்டு விஷேசங்களை எடுத்து நடத்துவீர்கள்.

12.6.24 முதல் 19.8.24 வரை மற்றும் 2.12.24 முதல் 5.4.25 வரை சந்திரனின் நட்சத்திரமான ரோகிணி நட்சத்திரத்தில் குரு செல்வதால் செல்வாக்குக் கூடும். இழுபறியான வேலைகள் உடனே முடியும். சொத்து வாங்குவீர்கள். மனைவிக்கு உடல் நிலை சீராகும்.

19.8.24 முதல் 2.12.24 வரை மற்றும் 5.4.25 முதல் 14.5.25 வரை செவ்வாயின் நட்சத்திரமான மிருகசீரிஷம் நட்சத்திரத்தில் குரு செல்வதால் மூத்த சகோதரர் உதவுவார். செல்வாக்குக் கூடும்.

**வியாபாரம் :** புதிது புதிதாக வந்த போட்டியாளர்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறினீர்களே! இனி அவர்களுக்கெல்லாம் பதிலடி கொடுக்கும் வகையில் உங்களின் அணுகுமுறையை மாற்றுவீர்கள்.

**உத்தியோகம் :** உங்களைக் குறை சொல்லிக் கொண்டிருந்த சக ஊழியர்கள் இனி நட்புறவாடுவார்கள். வேலைச்சுமை குறையும். மேலதிகாரியுடனான பனிப்போர் நீங்கும். கல்வித்தகுதியை உயர்த்திக் கொள்வீர்கள்.

**ஆகமொத்தம் இந்த குருப்பெயர்ச்சி பிரச்சினைகளால் சிதறிக்கிடந்த உங்களைச் சீர்செய்வதுடன் மனமகிழ்ச்சியையும் தருவதாக அமையும்.**

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** பிணக்குகள் நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். உணவு விடயத்தில் கவனம் தேவை. நல்ல செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. விற்பனையும் இலாபமும் எதிர்பார்த்தபடியே இருக்கும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியே ஏற்படும். காரியம் அனுகூலமாக முடியும். வியாபாரத்தில் பணியாளர்களால் பிரச்சினை ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மறைமுகத் தொல்லைகள் ஏற்படக்கூடும். சிறு சங்கடம் ஏற்படும், பாதிப்பு எதுவும் இருக்காது. ஒருமுறைக்குப் பல முறை யோசித்து எடுப்பது நல்லது.

**கடகம்:** அனுகூலமான நாளாக இருக்கும். வீண் செலவுகள் ஏற்படும். நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். நல்ல திருப்பம் ஏற்படும். எச்சரிக்கையாக இருக்கவும்.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். பேச்சு சாதகமாக முடியும். எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். முருகப்பெருமானை வழிபட மகிழ்ச்சி அதிகரிக்கும். உடல் அசதி ஏற்படக்கூடும்.

**கன்னி:** சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. உற்சாகமாக இருப்பீர்கள்.

**துலாம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். பிடிவாதப் போக்கு மன அமைதியை பாதிக்க வாய்ப்புண்டு. அனுசரித்துச் செல்வது நல்லது. காரியம் அனுகூலமாக முடியும்.

**விருச்சிகம் :** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். சுபநிகழ்ச்சிகளுக்கான பேச்சு சாதகமாகும்.

**தனுசு:** சாதிக்கும் நாளாக அமையும். பொருள் சேர்க்கை உண்டு. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பொறுமை அவசியம். வியாபாரத்தில் இலாபம் கூடுதலாகக் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாகும்.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உடல்நலம் பாதிக்கப்படலாம். கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடும். பொறுப்புகளை நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:** ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடுகள் நீங்கும். செலவுகள் அதிகரிக்கும். கையிருப்புக் குறையும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். பொறுமை அவசியம்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாக முடியும். உடல் ஆரோக்கியம் மேம்படும். எதிர்பாராத பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. தொல்லைகள் நீங்கும்.

# 1,700 ரூபா ஊதியம் முறைப்பாடில்லை

கொழும்பு, மே 16

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரத்து 700 ரூபா சம்பளத்தை வழங்குவது தொடர்பில் வெளியிடப்பட்ட வர்த்தமானிக்கு எதிராக பெருந்தோட்ட நிறுவனங்களிடமிருந்து இதுவரை எவ்வித முறைப்பாடுகளும் கிடைக்கவில்லை என தொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது. பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரத்து 700 ரூபா நாளாந்தச் சம்பளத்தை வழங்கும் வகையில், தொழில் ஆணையாளரால் கடந்த 30 ஆம் திகதி வர்த்தமானி வெளியிடப்பட்டிருந்தது. அதற்கான ஆட்சேபனைகள் அல்லது எதிர்ப்புகளை தெரிவிக்கும் கால அவகாசம் இன்றுடன் நிறைவடைகிறது என்றும் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. (ச-இ)



# வெளிநாட்டு சிகரெட்டுடன் வர்த்தகர் கைது

கொழும்பு, மே 16

சட்டவிரோதமாகக் கொண்டு வரப்பட்ட 21 இலட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் வர்த்தகர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் நேற்றுப் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

36 வயதுடைய வர்த்தகரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து 21 ஆயிரம் வெளிநாட்டு சிகரெட்டுகள் அடங்கிய பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. (ச-இ)

# ஆஸியில் வேலை; ஏமாற்றியவர் கைது

கொழும்பு, மே 16

அவுஸ்திரேலியாவில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி பணத்தை மோசடி செய்த நபர் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் பொல்ஹாவெல பிரதேசத்தைச் சேர்ந்த மூவரிடமிருந்து மூன்றரை இலட்சம் ரூபா தொடக்கம் 9 இலட்சம் ரூபா வரை பணமோசடி செய்துள்ளாரென விசாரணையில் தெரியவந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவேந்தலைத் தடுப்பது நல்லிணக்கத்துக்கு சாவுமணியே

**சந்திரகுமார் தெரிவிப்பு**

யாழ்ப்பாணம், மே 16

சர்வதேசத்தின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்ட நிலைமாறு கால நீதிப் பொறிமுறையில் நினைவேந்தல் மிக பிரதான பகுதியாகும். அந்த நினைவேந்தல் நிகழ்வைக் கூட தமிழ் மக்கள் மேற்கொள்ள முடியாத படி அரசு மேற்கொள்ளும் தடை நடவடிக்கைகள் இந்த நாட்டின் நல்லிணக்கத்தின் மீது அடிக்கும் சாவு மணியே, என நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளருமான மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில்,

2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் ஏராளமான தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர், அவர்களைநினைவு கூர்ந்து தங்களை ஆற்றுப்படுத்திக் கொள்வதற்குக் கூட முடியாத அளவுக்கு இலங்கையில் தமிழ்மக்கள் மீது அடக்குமுறை பிரயோகிக்கப்படுகிறது. தெற்குக்கு ஒரு நீதி வடக்குக்கு ஒரு நீதி என்ற நிலைப்பாட்டில் தமிழ்மக்கள் மீதான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்தச் சிறிய தீவில் அரசும் அதன் கட்டமைப்பும் பாரபட்சமாக நடந்துகொள்வது என்பது ஒரு காலமும் இனங்களுக்கு இடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தாது. நல்லிணக்கம் ஏற்படாத போது இலங்கையில் ஒருபோதும் நிலையான சமாதானம் ஏற்படாது.

யுத்தம் முடிவுக்கு வந்து 15 வருடங்கள் ஆகின்றபோதும் இனங்களுடைக்கிடையே இடைவெளி கூடிக்கொண்டுதான் போகிறதே தவிர குறைவதாகத் தெரியவில்லை. பாதிக்கப்பட்ட ஓர் இனத்தின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு, நல்லிணக்கத்தை வலுப்படுத்தவேண்டுமே தவிர வெற்றி பெற்ற மனநிலையில் இருந்துகொண்டு தமிழ் இனத்தைக் கையாள்வது கவலைக்கும், கண்டனத்துக்கும் உரிய விடயமாகும். எனவே இந்த அரசு உடனடியாக தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகளை கைவிட வேண்டும். உறவுகளை நினைவேந்தும் உரிமைகளில் தலையிட்டு தமிழ்மக்களைத் தொடர்ந்தும் காயப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவேண்டும்- என்றுள்ளது.

(ஒ-இ)


## வேலைவாய்ப்பு

- **Project Engineer (3 Nos)**
  Civil Engineering Degree with Two years Experience in Building Sector
- **Technical Officer (5 Nos)**
  (NCT-Civil/Qs, HND - Civil/Qs with Experience)
  (NCT- Elect/Building Services)
- **Environmental safeguard/Safety Officer**
  Degree in Environmental Science social Science or Equivalent.
- **A/C Mechanic**
- **Aluminum Fabricator**

"தகுதியானவர்களுக்கு கவர்ச்சியான சம்பளமும் தொடர்ச்சியான வேலைவாய்ப்பும் வழுங்கப்படும்"

தகுதியானவர்கள் தமது சுயவிபரக்கோவையை 20.05.2024ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் கீழ் வரும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**நேர்முகதேர்வு :- 20.05.2024 (திங்கட்கிழமை) காலை 9.00 மணி.**


(CR 42035) A-1

**No : 09, Nanthavil Lane, Thavady.**

**E-Mail: vacancynsc@gmail.com, WhatsApp: 0777120945**


## மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 09 . 1945



மறைவு 15 . 05 . 2024

**அம்பலவாணர் இராஜரட்ணம்**

**(ஓய்வு பெற்ற எழுதுநர், பொலிஸ் திணைக்களம், முன்னாள் பிராந்திய உதவி முகாமையாளர், ச.தொ.ச, யாழ்ப்பாணம்)**

முத்திரைச் சந்தையைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட அம்பலவாணர் இராஜரட்ணம் அவர்கள் நேற்று (15.05.2024) புதன்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - நாகம்மா தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், நாகம்மா, சீவரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராசையா - நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், மஞ்சுளா (பல்வைத்தியர்), சசிகரன் (உரிமையாளர், NRS மூக்குக் கண்ணாடியகம் - யாழ்ப்பாணம்), கோபிதரன் (நிர்வாக இயக்குநர் - STS வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திரகுமார் (கண் வைத்திய நிபுணர், STS வைத்தியசாலை - யாழ்ப்பாணம்), சுபசாயினி (ஆசிரியை, திருக்குடும்பக் கன்னியர்மடம், பம்பலப்பிட்டி), தர்சிகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அஸ்வினி - துவாரகன் (மருத்துவ பீட மாணவர்கள், கொழும்பு பல்கலைக்கழகம்), சுவஸ்தி, நதிசன், ஜஸ்னிகா, பிரஜீஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.05.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் (இல.56, விநாயகர் வீதி, கல்வியங்காடு) நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 00507) S-1

## மரண அறிவித்தல்



**சுப்பிரமணியம் மார்கண்டு**

அராலி தெற்கு வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் மார்க்கண்டு அவர்கள் நேற்று (15.05.2024) புதன்கிழமை காலமானார். அன்னார் சுப்பிரமணியம்-தையல்நாயகி தம்பதியரின் அன்பு மகனும் சந்திரவதனாவின் அன்புக் கணவரும் பிரியதர்சினி (லண்டன்), தர்ஷயா (நெதர்லாந்து), தனுஷியா (ஜேர்மன்), தசிதா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஞானகலாகரன் நர்மதன், சிவகுமார் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஆஷ்யா, நிவேதிதா ஆர்த்தனா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, பரமசிவம், பொன்னம்பலம், சிற்றம்பலம் மற்றும் குமாரசாமி, சிவபாக்கியம் (ஜேர்மன்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (16.05.2024) வியாழக்கிழமை காலை 7.00 மணியளவில் இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூனாவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**தொடர்புகளுக்கு:**
**077 405 5657**
**077 476 3693**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## நீங்கா நினைவுகளில்

**15ஆம் ஆண்டு** **32ஆம் ஆண்டு**


மலர்வு 25.04.1984



உதிர்வு 16.05.2009

**கதிர்காமவேலன் ஹரிதாஸ்**

மலர்வு 11.03.1972



உதிர்வு 28.08.1992

**கதிர்காமவேலன் சிறிகாந்தன்**

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

மீசாலை வடக்கு

என்றும் உங்கள் பிரிவுத்துயரால் வாடும்
**குடும்பத்தினர், உற்றார், உறவினர்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித பிலிப்பு நேரியார் ஆலயம் செம்பியன்பற்று



## வருடாந்த திருவிழா 2024

- 17.05.2024 வெள்ளிக்கிழமை மாலை 5.15 மணிக்கு புனித பிலிப்பு நேரியாரின் திருநாளுக்கான திருக்கொடியேற்றம் ஆரம்பமாகும்.
- நவநாள் திருப்பலிகள் மாலை 5.30 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகும்.
- 25.05.2024 சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு திருச்செபமாலையுடன் நற்கருணைப் பெருவிழா இடம்பெறும்.
- 26.05.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 5.45 மணிக்கு திருச்செபமாலையுடன் திருவிழாத் திருப்பலி இடம்பெறும்.
- போக்குவரத்து விசேட சேவைகள் யாழ்ப்பாணம். பருத்தித்துறையில் இருந்து 25.05.2024, 26.05.2024 ஆகிய தினங்களில் இடம்பெறும்.

இத்திருவிழாவிற்கு அனைத்து அடியார்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்புடன் அழைத்து நிற்கும்
**செம்பியன்பற்று பங்குத் தந்தை,
ஆலய அருட்பணி சபையினர் மற்றும்
பங்கு மக்கள்**

(CS/56074) J-1



# கேள்வி அறிவித்தல்.

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி (வடக்கு மாகாணம்)

01. தலைவர்.பிராந்திய பெறுகைக்குழு. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை. கிளிநொச்சி அவர்கள். கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களுக்கான இப்போது தகவுடையோரும் தகைமை பெற்றவருமான கேள்வியாளர்களிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றார்.

02. விலைக்கேள்வியானது தேசியபோட்டி கேள்வியின் [NCB] மூலம் நடாத்தப்படும்.

03. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் கேள்வி ஆவணத்தில் பகுதி IV இலும் மேலதிக தகவல்கள் பகுதி V (Section V) இலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

04. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை. கண்டி வீதி. கிளிநொச்சி. (தொலைபேசி இல. 0212285932/ 0212225719) அவர்களிடமிருந்து மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன். இம் முகவரியில் காலை 09.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பரிசோதனை செய்யலாம்.

05. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை. கண்டி வீதி.கிளிநொச்சி எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 17.05.2024 ஆம் திகதி முதல் 30.05.2024 ஆம் திகதி வரை மு.ப 09.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணி வரையான காலப்பகுதியில் கீழ்வரும் அட்டவணையில் கூறப்பட்டுள்ள மீளளிக்கப்படாத தொகையினை கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

06. 22.05.2024 ஆம் திகதியன்று முற்பகல் 10.30 மணிக்கு கேள்வியாளர்களுக்கான பெறுகை நடைமுறைமுறைகள் தொடர்பான முன் கூட்டம் (pre-bid meeting) எமது அலுவலகத்தில் நடைபெறும். அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் தவறாமல் கலந்துகொள்வது அவசியம்.

07. கேள்விகள் 31.05.2024 ஆம் திகதியன்று முற்பகல் 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர் .பிராந்திய கேள்விச்சபை. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை. கண்டி வீதி.கிளிநொச்சி எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் பொருட்களுக்கான கேள்வி இலக்கத்தினை தபாலுறையின் இடதுமேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். 31.05.2024 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகை தரவிரும்பும் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமுகத்தில் கேள்விகள் திறக்கப்படும்.

08. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கேள்விப் பிணைப்பணம் (Bid Security) செலுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

09. இவ் விலைமனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கை யிலிருந்து எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலைமனுகோரலை இரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

| No | Bid ID | Description | Quantity | Estimated Cost (Rs.) In Million without VAT | Non Refund | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount | Validity Period |
| 01 | NP/K/RDHS/PSSP/Fu/01/2024 | Celling Fans | 20 | 3.83 MN | 2,500.00 | 40,000.00 | 30.08.2024 |
| | | Wall Fans | 10 | | | | |
| | | Air Conditioner 18000Btu | 01 | | | | |
| | | Air Conditioner 24000Btu | 01 | | | | |
| | | Executive Chair | 01 | | | | |
| | | Executive Table | 01 | | | | |
| | | Refrigerators | 04 | | | | |
| | | Arm Chair | 20 | | | | |
| | | Almirah Steel with Front Glass | 10 | | | | |
| | | Revolving chairs Low back | 30 | | | | |
| | | Office Table | 30 | | | | |
| | | Pin board 6x4 | 20 | | | | |
| | | White Board 5x4 | 20 | | | | |
| | | Plastic Chair | 100 | | | | |
| | | Cloth Rack | 05 | | | | |
| | | Iron Rack | 02 | | | | |
| 02 | NP/K/RDHS/PSSP/IT/EQ/01/2024 | Desktop Computer Full Set | 13 | 4.6 MN | 2,500.00 | 50,000.00 | 30.08.2024 |
| | | Laptops | 04 | | | | |
| | | Printer | 07 | | | | |
| | | A3 Colour Printer | 01 | | | | |
| | | Photocopy Machine | 01 | | | | |

தலைவர்,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி.
T.P 0212285932, Fax- 0212285931
E mail –rdhskoc@gmail.com, financerdhskoc@gmail.com


# புதிய நிர்வாகத்தெரிவு

யாழ்ப்பாணம், மே 16

வலிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் ஊழியர் நலம்புரி சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் இடம்பெற்றது. தலைவராக மா.தவாலிங்கம், உப தலைவராக ச.கனிவாகரன், செயலாளராக. ம.ரேகா, பொருளாளர் திருமதி ர.ஸ்ருதி ஆகியோரும் நெறியாளர் உறுப்பினர்களாக திருமதி வி. மாலினி, திருமதி வி.சுகன்யா, போசகர். இ. குகன்ஸ்வரன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (ஒ-63)



பச்சிலைப்பள்ளி பிரதேச சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினரால் ஒழுங்கு செய்யப்பட்ட உணவுத்திருவிழா பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. (ஒ-9)

# பண்ணிசைப் பயிற்சிநெறி சான்றிதழ் வழங்குதல்

யாழ்ப்பாணம், மே 16

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால், திருக்கேதீஸ்வர திருத்தல சேர்ந்திசை விண்ணப்பமும், பண்ணிசைப் பயிற்சிநெறி சான்றிதழ் வழங்கும் நிகழ்வு மன்னார் கௌரியம்பாள் தமிழ் மகா வித்தியாலத்தில் எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்து சமய கலாசார அலுவல்கள்திணைக்களப் பணிப்பாளர் ய.அதிருத்தனன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் முன்னிலையாளராக ஹவாய் சைவ ஆதீனத்தின் உறுப்பினர் (அமெரிக்கா) ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள், பிரதம அதிதியாக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ஸ்ரீ. சற்குணராசா, சிறப்பு அதிதிகளாக முல்லைத்தீவு மாவட்ட செயலர் அ.உமாமகேஸ்வரன், மன்னார் மாவட்ட செயலர் க.கனகேஸ்வரன், விசேட அதிதிகளாக அண்ணாமலை பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர் பாலச்சந்திர ஓதுவார் மூர்த்திகள், தேவார இசைக்கலைமணி சிவகௌரி கிரீஸ்குமார், கௌரவ அதிதிகளாக யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை சிரேஷ்ட விரிவுரை யாளர் க.கிருபாசக்தி, பண்ணிசைப் பாடசாலை இயக்குநர் (மலேசியா) நாகப்பன் ஆகி யோர் கலந்து கொள்ளவுள்ளனர். நிகழ்வில் வாழ்த்துரையை சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்த லைவர் கலாநிதி ஆறுதிருமுருகன் ஆற்றவுள்ளார். (ஒ-இ)



கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் 'கலைஞர் சுவதம்' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கலைக்காகவே தம் வாழ்நாள்களில் பெரும் பகுதியை அர்ப்பணித்த மூத்த கலைஞர்களை வீடு தேடி மதிப்பளிக்கும் வேலைத்திட்டம் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது . (ஒ-9)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 16

வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் கோவில் திருவிழா தொடர்பான முன்னாயத்தக் கலந்துரையாடல் உதவிப் பிரதேச செயலர் திருமதி தமிழினி சதீஸ் தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச சபையினர், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர், பொலிஸார், வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர், கிராமமட்ட அதிகாரிகள் கோவில் நிர்வாகத்தினர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். இதன்போது எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாகி தொடர்ந்து 14 தினங்கள் நடைபெறும். ஜூன் முதலாம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். எனதீர்மானிக்கப்பட்டது. (ஒ-9)


வெல்டர் தேவை / பயிலுநர் தேவை

நற்பழக்கமுள்ள யாழ்ப்பாணத்திற்கு அண்மையில் உள்ள வெல்டர் / பயிலுநர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு:- 077 445 8582

(CS/55081) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தமிழரசுக் கட்சியின்
# வட்டுக்கோட்டைக் கிளையால் முள்ளிவாய்க்கால் அஞ்சலி!



யாழ்ப்பாணம், மே 16

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரவாதம் சரவணபவனின் ஏற்பாட்டில், வட்டுக்கோட்டை தொகுதிக் கிளையால் முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகமும் முள்ளிவாய்க்கால் நினைவு ஊர்திப் பவனியும் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

சாவகச்சேரி பேருந்து நிலையத்துக்கு அண்மையில் அமைந்துள்ள சிவன் ஆலயத்தில் இருந்து திருமதி சசிகலா ரவிராஜின் தலைமையில் இந்த நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. ஆரம்ப நிகழ்வாக, முன்னாள் பேராளியும் முன்னாள் உபதவிசாளருமான விஜயனால் பொதுச்சுடர் ஏற்றிவைக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ந்து படுகொலை செய்யப்பட்ட மாமனிதர் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ரவிராஜின் திருவுருவச் சிலைக்கு முன்பாகவும் முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி வழங்கப்பட்டதுடன், அஞ்சலி நிகழ்வுகளும் முன்னெடுக்கப்பட்டன.

இதேவேளை-இன்று வட்டுக்கோட்டையிலும், நாளை வேலணையிலும், நாளைமறுதினம் காரைநகரிலும் இந்த ஊர்தி பயணிக்கவுள்ளது. (ம-125)

# முள்ளிவாய்க்கால் கஞ்சி உரும்பிராயில் வழங்கல்

யாழ்ப்பாணம், மே 16

முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பின் 15 ஆவது ஆண்டு நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டு உரும்பிராய் மேற்கு இளைஞர்களின் ஏற்பாட்டில், முள்ளி வாய்க்கால் நினைவுக்கஞ்சி வழங்கும் நிகழ்வு உரும்பிராய் சந்திக்கு அருகில் அமைந்துள்ள தியாகி பொன். சிவகுமாரன் நினைவுத்தூபியின் முன்பாக நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. உரும்பிராய் உதவும் நண்பர்கள் அமைப்பின் தலைவர் ந. விஜயதரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் இணைத் தலைவர் வேலன் சுவாமிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ஒ-66)





# ரணில் அடியாள்
## ஐங்கரநேசன் சாடல்

யாழ்பாணம், மே 16

**ராஜபக்சவின் சகோதரர்கள் அரியணையில் இருந்து துரத்தப்பட்டு அவ்விடத்துக்கு ரணில் விக்கிரமசிங்க பிரதியீடு செய்யப்பட்டார். ரணில் மீட்பர் அல்லர். அவர் ஒரு பொருளாதார அடியாள். உலக வங்கி, நாணயநிதியம் ஆகிய சர்வதேச நிதி நிறுவனங்களின் தாழ்பணியும் ஒரு சேவகராகவே அவர் செயற்பட்டுவருகின்றார். என தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் கடுமையாகச் சாடியுள்ளார்.**

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் 'அற்றார் அழிபசி தீர்த்தல்' திட்டத்தின் கீழ் பொருண்மியம் நலிந்த குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகளை வழங்கி வைக்கும் நிகழ்ச்சி கடந்த ஞாயிற்றுக்கிழமை நல்லூரில் இடம்பெற்றது. நிகழ்வில் கலந்து கொண்ட போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

சரிந்திருக்கும் பொருளாதாரத்தைத் தூக்கி நிமிர்த்துவார், அடித்தட்டு மக்களின் வாழ்வை மேம்படுத்துவார் என்று நம்பியே ரணில் ஜனாதிபதியாக்கப்பட்டார்.

ஆனால், இன்று இலங்கையின் சனத்தொகையில் கால்வாசிக்கும் அதிகமான மக்கள் வறுமையில் வாடுகின்றனர். பொருளாதார மறுசீரமைப்பு என்ற பெயரில் சர்வதேச நாணயநிதியம் விதிக்கும் கட்டளைகளை சிரமேற்கொண்டு அரசாங்கம் நடைமுறைப்படுத்துகின்ற வரி விதிப்பு முறைகள், அத்தியாவசிய பொருள்களின் விலையேற்றம் எல்லாம் சேர்ந்து சமூகத்தின் மீது தொடுத்திருக்கும் தாக்குதலின் விளைவுகள்தான் இவை.

ரணிலை அடிக்கடி வெளிப்படையாகப் பாராட்டுவதன்மூலம் மக்கள் மத்தியில் ஒரு பொருளாதார மீட்பராகக் கட்டமைக்க அமெரிக்கா விரும்புகின்றது.

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் சமயத்தில் இந்த விம்பம் அவரை வெல்ல வைக்கும் என்றும் அமெரிக்கா நினைக்கின்றது. இலங்கையின் ஜனாதிபதியாக யார் வரவேண்டும் என்பதை வல்லாதிக்க சக்திகளே தீர்மானிக்கின்றன. அதற்கேற்ப மக்களை, வாக்காளர்களை, மக்கள் பிரதிநிதிகளை மூளைச் சலவை செய்யும் வேலைகள் கனகச்சிதமாக நிகழ்ந்து கொண்டிருக்கின்றன - என்றார். (ஒ-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை முதலுதவிச்சங்க இந்துசமயத் தொண்டர் சபை மற்றும் இலங்கை மலையக இந்துக் குருமார் ஒன்றியம் என்பன இணைந்து ஏற்பாடு செய்த சிவனொளிபாதமலை நோக்கிய புனித திருத்தலத் தரிசன யாத்திரை இலங்கை முதலுதவிச்சங்க இந்துசமயத் தொண்டர்சபையின் தேசிய ஆணையாளர் வை.மோகனதாஸ் தலைமையில் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமானது. (ப-66-20)



திருக்கேதீச்சர ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருந் திருவிழா, கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. திருக்கேதீச்சர ஆலய பிரதம குரு கருணாநந்தக் குருக்கள் தலைமையில் வசந்த மண்டபத்தில் விசேட பூஜை வழிபாடுகளும் இடம்பெற்றன. (ப-56)



கந்தரோடை அருளானந்தப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவப் பெருவிழா, கடந்த வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து பதினைந்து தினங்கள் மஹோற்சவப் பெருவிழா நடைபெறவுள்ளது. (ப-66)



சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், வாராந்த நிகழ்வு, சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. அதில் சைவப்புலவர் செ.த.குமரன் கலந்துகொண்டு சொற்பொழிவு நிகழ்த்தினார். அறநெறிப் பாடசாலை மாணவர்களைத் திருக்கேதீச்சரத்துக்கு அழைத்துச் செல்வதற்காகவும், மாணவர்களிடம் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்குப் பரிசில்கள் வழங்குவதற்காகவும் நிதியுதவிகள் வழங்கப்பட்டன. (ப-66)



வவுனியா புதுக்குளம் கனிஷ்ட வித்தியாலயத்தில் கடந்த 13 வருடங்களாக அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றுச் செல்லும் பாடசாலை முதல்வருக்கான பிரியாவிடை நிகழ்வு பாடசாலைச் சமூகத்தினரின் ஏற்பாட்டில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (எ-75)






தமிழ்த் தேசியப் பசுமை இயக்க[illegible]ின் ஏற்பாட்டில் 'அற்றார் அழி பசி தீர்த்தல்' எனு[illegible]திட்டத்தின் கீழ் பொருண்மியம் நலிவுற்ற கு[illegible]ங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கு[illegible]பாடு நல்லூரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை [illegible]டுக்கப்பட்டது. தெரிவுசெய்யப்பட்ட 100 [illegible]களுக்கு அத்தியாவசிய உலருணவுப் பொதிக[illegible]ங்கப்பட்டன. கனடாவைச் சேர்ந்த செல்லைய[illegible]லிங்கம் மற்றும் லண்டனில் வசிக்கும் சற்[illegible]நாதன் துஷாகரன் ஆகியோர் இதற்கான நிதியு[illegible]வியை வழங்கியிருந்தனர். (எ-27)



சர்வதேச தாதியர் தினத்தை முன்னிட்டு, யாழ்.போதனா மருத்துவமனை மற்றும் தாதியர் பயிற்சிக் கல்லூரி என்பன இணைந்து ஏற்பாடு செய்துள்ள தாதியர் தின நிகழ்வுகள், யாழ்.தாதியர் பயிற்சிக் கல்லூரி மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றன. (ப-66)



குப்பிழான், வடபத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம், கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமானது. (ப-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பத்துக்கு காப்புறுதி; கோருகின்றனர் அமைச்சர்கள்

கொழும்பு, மே 16

அமைச்சர்கள் தங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கும் காப்புறுதி வழங்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற விசேட குழுக் கூட்டத்திலேயே அவர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது. தாங்கள் மாகாணசபைகளில் பதவி வகித்தபோது, தங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கும் காப்புறுதி வழங்கப்பட்டது என்று குறிப்பிட்டுள்ள அவர்கள், தற்போதும் தங்கள் மனைவி, பிள்ளைகளுக்குக் காப்புறுதி வழங்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போதுள்ள நிதித் தட்டுப்பாடு காரணமாக குடும்ப உறுப்பினர்களுக்கு காப்புறுதி வழங்குவது சாத்தியமற்றது என்று சபாநாயகர் பதிலளித்துள்ளார். இந்த விடயம் தொடர்பாக மேலதிக கலந்துரையாடல்கள் மேற்கொள்ளவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளன. அதேவேளை, அமைச்சர் ஒருவருக்கு விபத்து ஏற்பட்டாலோ அல்லது நோய் வாய்ப்பட்டாலோ ஒரே தவணையில் கிடைக்கும் காப்புறுதிப் பெறுமதி 10 இலட்சம் ரூபா என்பது குறிப்பிடத்தக்கது. (அ-எ-இ)

## மே 18...

இது குறித்து ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் தவத்திரு அகத்தியார் அடிகளார் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

ஏற்கனவே வடமாகாண சபையால் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ள நிலையில் இதனை உணர்வுபூர்வமாக தமிழர் தாயகமெங்கும் அனுஷ்டிக்க அனைத்து தமிழ்த் தேசிய சக்திகளோடும் கலந்தாலோசித்து ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு அழைப்பு விடுக்கின்றது இந்த நாளில் முள்ளிவாய்க்காலில் சென்று நினைவேந்தக் கூடியவர்கள் வழமை போன்று முள்ளிவாய்க்கால் பொதுக் கட்டமைப்பு ஒழுங்கு செய்த நிகழ்வுகளில் பங்கேற்குமாறும் வேண்டி நிற்கின்றோம்.

அதேநேரம் அங்கு செல்லமுடியாதவர்கள் தங்கள் பிரதேச வழிபாட்டுத்தலங்களில் ஒன்றுகூடி பிரார்த்தனைகளை மேற்கொள்ளவும் வேண்டுகின்றோம்.

அன்றையதினம் அனைத்துத் தமிழர் வணிக வளாகங்கள், பொது இடங்கள் என்பவற்றில் கறுப்புக்கொடிகளை பறக்கவிடுமாறும் கறுப்புப் பட்டியுடன் கடமைகளில் ஈடுபடுமாறும் கோருகின்றோம்.

அன்றைய தினத்தில் எமது தெருக்களை, பொது இடங்களை, வீட்டின் முன்னுள்ள வீதியோரங்களை துப்புரவு செய்வதுடன் அனைத்துக் கேளிக்கை நிகழ்வுகளையும் தவிர்த்து முள்ளிவாய்க்கால் கஞ்சியை ஒருநேர உணவாகவேனும் உண்பதற்கு ஒவ்வொரு தமிழ்க் குடும்பமும் முன்வருவோம்.

மேலதிக தனியார் கல்வி நடவடிக்கைகள் அனைத்தையும் அன்றைய தினம் முழுமையாக நிறுத்தி எம் இளையோருக்கு எம் வலிகளின் ஆழத்தை சாத்வீகமாக - உணர்வுபூர்வமாக வெளிப்படுத்துவோம்.

இந்தக் காலப்பகுதியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இரத்ததான முகாம்களில் பங்கேற்போம்.

வலிசுமந்த குடும்பங்களுக்கு மனரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் ஆறுதல் அளிப்போம்.

இந்தத் தமிழ்த் தேசிய துக்கநாளில் ஒட்டுமொத்த தமிழராக நிலத்திலும் புலத்திலும்எம் உச்சபட்ச ஆத்மார்த்த உணர்வை அமைதியாக - உறுதியாக வெளிக்காட்டுவோம். அதற்காக அனைவரும் திடசங்கற்பம் பூணுவோம் - என்றுள்ளது. (அ-எ)

## இன அழிப்பின்...

கொள்ளப்பட்ட இன அழிப்புப்போரின் ஒரு முக்கியமான குறியீடே முள்ளிவாய்க்கால் கஞ்சி என்று யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

யுத்தம் முடிந்து, சரணடைவுகளின் பின் அரச கட்டுப்பாட்டுக்குள் வந்து சேர்ந்தவர்களது எண்ணிக்கை 3 இலட்சத்து 70 ஆயிரமாக இருந்தது. இவர்கள் இராணுவக் கட்டுப்பட்டுக்குள் வரும் வரை தமது உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு வர உதவியது அந்த மக்கள் தம் உடைமைகளில் வைத்திருந்த அரிசி, தேங்காய் போன்றவற்றைப் பகிர்ந்து காய்ச்சிய கஞ்சிதான். இதனால்தான் முள்ளிவாய்க்கால் கஞ்சி இவர்களது உயிர் காத்த கஞ்சியாகவும் வரலாற்றுச் சிறப்புப் பெறுகின்றது.

இலங்கை வாழ் தமிழர்களின் குறிப்பாக வடக்கு - கிழக்கில் வாழும் தமிழர்கள் எதிர்கொண்ட மிகவும் மோசமான துன்பங்களையும் இலட்சக்கணக்கான மக்கள் காவு கொள்ளப்பட்டமையையும் நினைவுகூருவதுதான் இந்த முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாற்றம்.

உயிரிழந்தவர்களை நினைவுகூர்வதைத் தடுப்பது மிகவும் மோசமான மனித உரிமை மீறலாகும். தற்போது பல்வேறு இடங்களில் இடம்பெற்றுவரும் முள்ளிவாய்க்கால் கஞ்சிப்பரிமாற்ற நிகழ்வுகளை ஆட்சியாளர்கள் தடுக்க முயல்வது குறிப்பாக கிழக்கில் சம்பூர் பகுதியில் இந்நிகழ்வுகளில் பங்கெடுத்தவர்கள் இரவிரவாகக் கைது செய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டிருப்பது மிக மோசமான மனித உரிமை மீறலாகும்.

சர்வதேச மன்னிப்புச்சபை இலங்கையில் இடம் பெற்று வரும் சிறுபான்மையினருக்கெதிரான மனித உரிமை மீறல்களை தொடக்கத்திலிருந்தே சுட்டிக்காட்டி வருவது நாமறிந்ததே. இவ்வாறிருக்கையில் மன்னிப்புச்சபையின் செயலாளர் அக்னஸ் கலமார்ட் இலங்கைக்கு வந்து குறிப்பாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தலிலும் பங்கெடுப்பதை நாம் வரவேற்கின்றோம் - என்றுள்ளது. (அ-ம)

## முகவர்களுக்கு...

பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ரஷ்ய - உக்ரைன் போருக்கு ஓய்வு பெற்ற இராணுவத்தினரைக் கூலிப்படையாகப் பயன்படுத்தி ஆட்கடத்தலில் ஈடுபட்ட சந்தேகத்தில் ஓய்வுபெற்ற சிரேஷ்ட இராணுவ அதிகாரி உட்பட மேலும் சில சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய - உக்ரைன் போரில் தொடர்புபட்டுள்ள இலங்கையைச் சேர்ந்த ஓய்வு பெற்ற இராணுவத்தினர் தொடர்பில் அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது. கடந்த பாதுகாப்புச்சபைக் கூட்டத்தில் இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட பாதுகாப்புப் பிரதானிகளின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

இந்த விவகாரம் தொடர்பாக சுமார் 288 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இந்த ஆட்கடத்தல்கள் தொடர்பில் சமூக வலைத்தளங்கள் மூலம் பரப்புரை செய்யப்படுகின்றது. இந்த ஆட்கடத்தலில் பலர் சிக்கி உள்ளனர். இந்த ஏமாற்று முயற்சிகளில் பொதுமக்கள் சிக்கிக் கொள்ளவேண்டாம் - என்றார். (அ-எ)

## பொறியியலாளர்...

வைத்த கேள்விக்குப் பதிலளித்த இலங்கை மின்சாரசபையின் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் பாலித பெரேரா, இலங்கை மின்சாரசபையில் பொறியியலாளர் பதவி வெற்றிடங்கள் 330 உள்ளன என்று தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு மற்றும் இந்த ஆண்டின் முதல் 4 மாதங்களில் 130 பேர் பதவி விலகியுள்ளனர். ஓய்வு பெற்றவர்களைப் பணியில் சேர்க்க முடியாத காரணத்தால் பொறியியலாளர் பற்றாக் குறை உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-எ-இ)

## 'யூடியூப் சனல்'...

கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் நேற்று நிகழ்நிலைப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் நிபந்தனை உத்தரவு பிறப்பித்துள்ளது.

கொழும்பு பிரதான நீதிவான் திலின கமகே, 2024 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க நிகழ்நிலைப் பாதுகாப்புச் சட்டத்தின் 24 (1) மற்றும் பிரிவு 24 (2) ஆகியவற்றின் அடிப்படையில் இராணுவத் தளபதிக்கு ஆதரவாக நிபந்தனையுடன் கூடிய உத்தரவைப் பிறப்பித்ததுடன், அந்த உத்தரவை பிரதிவாதிகளான 'யூடியூப் சனல்' மற்றும் அதன் உரிமையாளருக்கு அறிவிக்கவும் உத்தரவிட்டார்.

நாட்டின் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில், தனக்கு எதிராக தீங்கிழைக்கும் மற்றும் அவதூறான காணொளி உள்ளடக்கங்கள் மற்றும் அறிக்கைகளை பிரதிவாதிகள் பதிவேற்றப்படுகின்றன என்று மனுதாரர் குற்றம் சாட்டியிருந்தார். மனுதாரர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி ஷிராஸ் நூர்தீன் முன்னிலையாகியிருந்தார். (அ-எ-இ)

## முள்ளிவாய்க்கால்...

நினைவு ஊர்திப் பவனி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

நினைவு ஊர்திப் பவனி நேற்று மானிப்பாயை சென்றடைந்த நிலையில், பொதுச் சந்தைத் தொகுதியில் திருமதி யசோதை சரவணபவன் தலைமையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இறுதிப் போரில் உயிரிழந்தவர்களை நினைவுகூர்ந்து பொதுச் சுடரை திருமதி யசோதை சரவணபவன் ஏற்றினார். அதைத் தொடர்ந்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது. அஞ்சலி நிகழ்வில் பெரும் திரளானோர் பங்குபற்றினர்.

முள்ளிவாய்க்கால் நினைவு ஊர்திப் பவனி இன்று வட்டுக்கோட்டைக்கும், நாளை வேலணைக்கும், நாளைமறுதினம் காரைநகருக்கும் பயணிக்கும். இறுதிநாள் நினைவேந்தல் சங்கானை பஸ் தரிப்பிடத்தில் மாலை 5 மணிக்கு நடைபெறும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (அ-எ-125)

## குமுதினிப்...

நெடுந்தீவுக் கடற்பரப்பில் குமுதினிப் படகில் பயணித்த பொதுமக்கள் இலங்கைக் கடற்படையினரால் கொடூரமான முறையில் கொல்லப்பட்டனர். இந்தக் கொடூரச் சம்பவத்தில் 7 மாதப் பெண் குழந்தை உட்பட 36 பேர் வெட்டிக் கொலை செய்யப்பட்டனர்.

இந்தக் கோரக் கொலைச் சம்பவம் நடந்து 39 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், நேற்று நெடுந்தீவில் மக்கள் உணர்வெழுச்சியுடன் நினைவேந்தல் நிகழ்வுகளை முன்னெடுத்திருந்தனர்.

மாவிலித் துறைமுகத்தில் அமைந்துள்ள குமுதினிப் படுகொலை நினைவுத்தூபியில் நினைவுச் சுடர்கள் ஏற்றப்பட்டு, மலரஞ்சலி செலுத்தப்பட்டது. பசுந்தீவு ருத்திரன் எழுதிய, குமுதினிப் படுகொலை நினைவுகளைச் சுமந்த "உப்புக் கடலை உரசிய நினைவுகள்" என்ற கவி நூல் வெளியீடும் நடைபெற்றது. கொல்லப்பட்டவர்களின் நினைவாக மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன. அதேவேளை, நினைவேந்தல் நிகழ்வில் முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கப்பட்டது. (அ-எ-125)

## யாழில்...

திடீர்ப் பயணம் மேற்கொண்டு பல்வேறு இடங்களுக்குச் சென்றிருந்தார்.

மானிப்பாயில் உள்ள கிறீன் ஞாபகார்த்த மருத்துவமனைக்குச் சென்ற சங், மருத்துவனைச் செயற்பாடுகளைப் பார்வையிட்டதுடன், ஊழியர்களுடனும் கலந்துரையாடினார். அமெரிக்கத் தூதுவர் வருகையின் நினைவாக மரக்கன்று ஒன்றும் அங்கு நடப்பட்டது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட பீடாதிபதி எஸ்.சுரேந்திரகுமாரன், தென்னிந்தியத் திருச்சபையின் யாழ்ப்பாண மறை மாவட்ட ஆயர் வி.பத்மதயாளன், அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் ஆகியோரும் இந்தச் சந்தர்ப்பத்தில் உடனிருந்தனர். (அ-எ-27)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்

தொடர்புகளுக்கு: (CS/54971) J-1

074 173 7684

## NEC

யாழ் நகர்

A/L-2026
கலை
வர்த்தகம்
ஆரம்பம்
MAY 19
ஞாயிறு காலை 09.00 மணி

மாணவர்கள் பாடத்தெரிவினை மேற்கொள்வதற்காக இம்மாதக் கட்டணம் அறவிடப்படமாட்டாது

அலுவலக தொடர்பு: 076 535 0999

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ் நல்லூர் கோயிலுக்கு முன்பாக நல்ல சூழலில் **வீடு வாடகைக்கு உண்டு.** விபரங்கள் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்புகளுக்கு

076 070 7909, 075 070 7992

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சுன்னாகம் மின்சார நிலைய வீதியில் 31 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது.
- குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி
- சுன்னாகம் நகரம் 1 Km
- ஒரு பரப்பின் விலை 15 இலட்சத்திலிருந்து 20 இலட்சம் வரை
- தரகர் தேவையில்லை.

(CS/4888) J-1

தொடர்பு :- 077 886 2927

## வீடு வாடகைக்கு

நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு அண்மையில் **வீடு வாடகைக்கு உண்டு.** (பகுதி) சிறிய குடும்பம் 3 பேருக்கு உட்பட இரண்டு அறை, தனி குளியலறை, மலசல கூட வசதி உண்டு.

(CS/55077) J-1

தொடர்பு:- 077 728 3692


## மரண அறிவித்தல்

தோற்றம் 01 - 07 - 1950



மறைவு 14 - 05 - 2024

### பேரின்பநாயகி ஜெகதீசன்

யாழ். மூன்றாம் கட்டை கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட பேரின்பநாயகி ஜெகதீசன் நேற்று முன்தினம் (14.05.2024) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவஞானம் - நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா ஜெகதீசன் அவர்களின் அன்புத் துணைவியாரும், காலஞ்சென்ற அரவிந்தநாயகி, உதயகுமாரி (ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் - வடக்கு,கிழக்கு மாகாணம்), ஜெயகுமாரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், ஸ்ரீநவநீதகிருஷ்ணபிரகாஷ் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.05.2024) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் ஆரம்பித்துப் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு முற்பகல் 10.00 மணியளவில் எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

3ம் கட்டை,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

(CS/ 55079) J-1

தகவல்:
குடும்பத்தினர்

## 1-ம் ஆண்டு நினைவு அஞ்சலி

அமரர்
பாலத்துரை ஜெயசிங்

நாள் : 16.05.2024



நீ எங்களை விட்டு பிரிந்தாலும்
எங்களை விட்டு மறைந்தாலும்
நாங்கள் நினைத்தவுடன்
கண்களில் இருப்பாய் கண்ணீராக ...

உங்கள் நினைவில் வாழும்...
அம்மா,
சகோதர
சகோதரிகள்

(CS 501) A-1


## A/L தொழினுட்பப்பிரிவு

smart thinking leads to innovate

## Techna
Technical Institute

## புதிய பிரிவு ஆரம்பம்
## A/L 2026

19.05.2024(ஞாயிற்றுக்கிழமை)
காலை 8.00 மணிக்கு

உயிர் முறைமைகள் தொழினுட்பவியல்
M.விஷ்ணு P.நிறோஜனன்
தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்
S.சக்தி
பொறியியல் தொழினுட்பவியல்
S.மயூரதன்
ICT — T.லவன்
கணிதம் — T.சசிகரன்
விவசாய விஞ்ஞானம் — S.சஜீபன்
புவியியல் — S.P.கரன்

**மாணவர்கள் TECHNAவை ஏன் தெரிவு செய்ய வேண்டும்?**

- மாணவர்கள் மீது தனிப்பட்ட கவனிப்பு.
- தொடர்ச்சியாக 7 நாட்களும் வகுப்புக்கள் நடைபெறும்.
- மாதாந்தப் பரீட்சை, அலகுப் பரீட்சை, தவணைப்பரீட்சைகள்
- புள்ளிகளுக்கேற்ப Z.SCORE மூலமான தரப்படுத்தல்.
- பாடங்களுக்கான கையேடுகள் வழங்கப்படும்.
- அனுபவம்மிக்க ஆசிரியர்களின் வழிகாட்டல்.
- குழு அடிப்படையிலான செயன்முறை பயிற்சி வகுப்புக்கள்
- களப்பயணங்களை மேற்கொள்ளல்.
- இறுதிப்பரீட்சையை நோக்கிய வினைத்திறனான தயார்படுத்தல்.

தொழினுட்பப்பிரிவு மாணவர்களா நீங்கள்?
உங்கள் கனவுகளை நினைவாக்க எங்களுடன் இணையுங்கள்

வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம்.

077 170 3549

## NEW SCIENCE WORLD
NEW SCIENCE WORLD VICTORY MUST

கணித - விஞ்ஞானப் பிரிவுகள்

## A/L 2026
### Tamil & English Medium

நேரடி வகுப்புக்கள் மற்றும் Zoom இன் ஊடான இணையவழி வகுப்புக்கள்

| | |
|---|---|
| பௌதிகவியல் - | திரு. R.குமரன்<br>திரு. R.குகன் |
| இரசாயனவியல் - | திரு. டயஸ்<br>திரு. K.T.சிவகுமார் |
| உயிரியல் - | திரு. N.T.கஜேந்திரன் |
| இணை.கணிதம் - | திரு. S.S.செந்தில்ராஜ்<br>திரு. V.ஹரிகரன் |
| ICT - | திரு. T.லவேந்திரன் |

ஆரம்பம் :- 23.05.2024 (வியாழக்கிழமை) காலை 8.00

அனுமதிகளை 19.05.2024 (ஞாயிற்றுக்கிழமை) அன்று காலை 9.30 மணியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு :-
077 336 4055, 021 221 6690,
077 336 4030, 075 836 4055

New Science World
Navalar Road, Brown Road, Junction, Jaffna.


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.05. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.